

தாராபுரம் சட்டமன்ற தொகுதி, தாராபுரம் கிழக்கு ஒன்றியம் மாம்பாடி ஊராட்சி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே.எம்.தண்டபாணி ஏற்பாட்டில் தவெக கட்சியிலிருந்து 50க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என். நல்லசிவம் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்த அனைவரையும் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் கருப்பு, சிவப்பு இருவண்ண சால்வை அணிவித்து லரவேற்றார்.

மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் :

இரண்டு தொகுதிகளிலும் தி.மு.க.வே வெற்றி பெறும்!

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் பேச்சு!

மதுராந்தகம், அக். 2 -

மதுராந்தகம், தாராபுரம் இரண்டு சட்டமன்ற இடைத்தேர்தலிலும் திமுகவே வெற்றிபெறும் என்று, மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலின் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்ற பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசும்போது கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் குறிப்பிட்டார். நிகழ்ச்சியில் கழக கொறடா எ.வ.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

29.09.2026 செவ்வாய் கிழமை மாலை 7.00மணிக்கு அன்று, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், ஒரத்தி ஊராட்சி, கழக தேர்தல் அலுவலகத்தில் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆலோனைக் கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற எதிர் கட்சி கொறடாவுமான எ.வ. வேலு தலைமை வகித்தார்.

மாவட்ட செயலாளர் க.சுந்தர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள்



ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். அவர் உரையாற்றும் போது...

கழகத் தோழர்கள், நிர்வாகிகள் அனைவரும் மனைவி, மக்களை விட்டு இரவு பகல் பாராமல் இங்கு நாம் பணியாற்றி வருகிறோம். இந்த உழைப்பிற்கு வெற்றிபெற்றால் மட்டுமே அர்த்தமுண்டு, எனவே அனைத்து நிர்வாகிகளு டன் முழு மூச்சுடன் ஒவ்வொரு வாக்காளர்களையும் நேரில் சந்தித்து, திராவிட மாடல் ஆட்சியில் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்து நடைமுறைப்படுத்திய திட்டங்களை எடுத்துச் சொல்லியும், நான்கு மாதத்தில் தவெக அரசு தமிழக நிர்வாகத்தை சீர்குலைத்தும், மின்வெட்டு, விவசாயக் கடன் முழுமையாக ரத்து செய்யாதது, தலைமைச் செயலகம் கட்டுவது குறித்த குழப்பமான சூழ்நிலை, வாக்குறுதிகளை நிறைவேற்றாமை, சட்டம்ஒழுங்கு சீர்குலைவு மற்றும் மக்கள் தினசரி படும் அவலங்களை எடுத்துச் சொல்லி வாக்குசேகக்க வேண்டும். மக்கள் மனதில் நமது தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உழைப்பையும், தியாகத்தையும் பதிவு செய்யவேண்டும், களத்தில் உள்ள தோழர்கள் தொய்வில்லாமல் முழு மூச்சாக பணியாற்ற வேண்டும். இடைத்தேர்தல் நடைபெறும் இரண்டு தொகுதிகளிலும் கழகமே வெற்றிபெறும்.

தவெக அரசு மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றாமலும், தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகள் எதையும் செய்யாமலும், ஐந்து மாத ஆட்சிகாலத்தில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு மற்றும் கஞ்சா புழக்கத்தில் முன்னணியில் உள்ளது.

இவ்வாறு கழக பொதுச்செயலாளர் துரைமுருகன் உரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ். ஜெகத்ரட்சகன்.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் கார்த்திகேயன், எஸ்.அம்பேத்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் த.உதயசூரியன், மு.பெ.கிரி, பெ.சு. தி.சரவணன், ஒ.ஜோதி, எதிரொலிமணியன், கோ.கண்ணன், இரா. ஸ்ரீதரன், தொ.மு.ச. சௌந்தரராசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

த.வெ.க. அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாததால்,

ஏமாற்றம் அடைந்த மக்கள் இடைத்தேர்தலில் நிச்சயம் பாடம் புகட்டுவார்கள்!

திருவண்ணாமலையில் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

திருவண்ணாமலை, அக்.2–

முன்னாள் அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு திருவண்ணாமலை யில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:–



செய்தியாளர்: *100 நாள் வேலை திட்டத்தில் தொடர்ந்து மூன்று மாதங்களாகப் பணி வழங்கப்படவில்லை என்றும், ஊதியம் ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை என்றும், தொடர்ந்து 10 நாட்களுக்கு வேலை இல்லை என்று சொல்கிற மாதிரியும் பொது மக்கள் தமிழகம் முழுவதும் ஒரு குற்றச்சாட்டை வைக்கிறார்களே, அதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள் சார்?*

பி.கே.சேகர்பாபு: எங்களுக்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் இடைத்தேர்தலில் கூட பல இடங்களில் மக்களைச் சந்திக்கின்ற பொழுது, உலகமே வரவேற்ற "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில்" பெறவேண்டிய நபர்களுக்கு உண்டான மாதாந்திர ஊக்கத்தொகை பெறவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது.

அதேபோல், மாற்றுத்திறனாளிகளுக்கு ஆயிரம் ரூபாயாக இருந்ததை ஆயிரத்து இருநூறு ரூபாயாக உயர்த்தி வழங்கிய அந்தத் தொகையும் நிறைய பேருக்கு வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது.

100 நாள் வேலைத் திட்டத்தில் பெரும் குளறுபடிகள்!

அதேபோல, 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் முழுமையாகப் பணிகளும் வழங்குவதில்லை; அப்படிப் பணிகள் வழங்கினாலும் மூன்று மாதம், நான்கு மாதங்களுக்குப் பிறகுதான் அந்தப் பணிகளுக்கு உண்டான ஊதியமும் கிடைப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது.

மக்களுடைய அவலக் குரல் ஓட்டுமொத்தமாக ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அவர்களே கேட்கிறார்கள், சர்க்கரை விலையைப் பார்த்தீர்களா, அரிசி விலையைப் பார்த்தீர்களா, பருப்பு விலையைப் பார்த்தீர்களா என்று. "மாற்றம் மாற்றம்" என்றோம்; இந்த விலைவாசி உயர்வுதான் மாற்றமாக இந்த ஆட்சியில் கண்டுகொண்டிருக்கிறோம் என்று சொல்லொணாத் துயரத்தில் இன்றைக்கு மக்கள் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

செய்தியாளர்: *கடந்த ஆட்சிக் காலத்தில் நீங்கள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக இருந்தீர்கள். ஆனால், கோயிலுக்கு இதுவரைக்கும் யானை வரவில்லை. இப்போது த.வெ.க. ஆட்சியில் புது யானை வந்திருக்கிறது.*

பி.கே.சேகர்பாபு: இதற்கும், இந்த ஆட்சிக்கும் சம்பந்தம் இல்லை. ஏதோ சொல்வார்களே 'மொட்டைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போல', ஒன்றிய உள்துறை அமைச்சர் இந்தத் திருக்கோயிலுக்கு வந்தபோது, யானை குறித்து இங்கே இருக்கின்ற அர்ச்சகர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, ஏற்கனவே வனத்துறைச் சட்டத்தில் இருந்த அந்தச் சிரமங்களைப் போக்கி, ஒன்றிய அரசு பிறப்பித்த உத்தரவிற்கு ஏற்ப மாநிலத்தின் நீதிமன்றங்களும் அந்த உத்தரவை ஏற்று யானைகள் வழங்குவதற்கு உண்டான தடையை நீக்கியதால்தான் யானைகள் இப்போது ஐந்து திருக்கோயில் களுக்கு வந்திருக்கின்றன.

அறநிலையத்துறையில் கழக அரசின் பணிகள்!

அந்தத் தேவைகளையும் ஏற்கனவே அறிந்து, அதற்குண்டான கருத்துரையை வழங்கிய அரசு, இந்து சமய அறநிலையத்துறை அரசு, திராவிட மாடல் அரசு.

த.வெ.க.அரசுக்கு பணிவும் இல்லை! துணிவும் இல்லை!

செய்தியாளர்: *நீங்கள் சொல்லும் அந்தக் குரல், வரும் இடைத்தேர்தல்களில் த.வெ.க. அரசுக்கு எதிர் பார்ப்பாக ஒலிக்குமா?*

பி.கே.சேகர்பாபு: நிச்சயமாகப் பலன் அளிக்கும். ஏனென்றால், மனிதனிடம் அனைவரும் எதிர் பார்ப்பது ஒரு பாடல் வரியைத்தான்: "பதவி வரும்போது பணிவும் வரவேண்டும், துணிவும் வரவேண்டும் தோழா" என்பது. ஆனால், இவர்களிடம் பணிவும் இல்லை, துணிவும் இல்லை; ஆணவமும், ஆங்காரமும், அகம்பாவமும்தான் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது. நீச்சயம் அதற்கு மக்கள் பதிலளிப்பார்கள்.

செய்தியாளர்: *த.வெ.க. ஆட்சிப் பொறுப்பேற்ற நாளில் இருந்து பல திட்டங்களை அறிவிக்கிறார்கள், எதிர்ப்பு வந்ததும் பின்வாங்குகிறார்கள். இதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?*

பி.கே.சேகர்பாபு: திட்டமிடல் இல்லை! நிர்வாகத் திறமையற்ற அரசு. இந்த அரசு என்பதற்கு இதெல்லாம் ஒரு உதாரணம். நீங்கள் திருக்கோயிலையே எடுத்துக்கொண்டால், முதலிலே திருச்செந்தூரிலே கட்டண உயர்வு என்றார்கள், திரும்பப் பெறப்பட்டது. ஆன்லைன் தரிசனம் என்று அறிவித்தார்கள், இதுவரை ஒரு திருக்கோயிலுக்குக் கூட ஆன்லைன் தரிசனம் கொண்டுவரப்படவில்லை. செல்போனுக்கு ரூ.5 என்றார்கள், ஒரு திருக்கோயிலிலும் செயல்படுத்தப்படவில்லை.

இன்று இந்த இடத்தில் நின்று சொல்லுகிறோம், மதுரை மீனாட்சி அம்மன் - அங்கயற்கரசி, மங்கையற்கரசி என்று போற்றப்படுகின்ற 6,000 ஆண்டுகளாக மதுரையை ஆண்டு கொண்டிருக்கின்ற அந்த அம்பாளுக்கு - 180 பணிகளில் ரூ. 35 கோடிக்கு மேல் உபயதாரர் மற்றும் திருக்கோயில் நிதியில் பணிகளை மேற்கொண்டு, ஆட்சி அதிகாரம் இருக்கின்ற பொழுதே திராவிட மாடல் ஆட்சியில் 17.09.2026 என்று அங்கு இருக்கின்ற அர்ச்சகர்கள் மற்றும் பட்டாச்சாரியாரால் நிர்ணயம் செய்யப்பட்ட அந்தத் தேதியில் குடமுழுக்கு நடத்திய ஆட்சி எங்களுடைய ஆட்சி!

இந்த 100 ஆண்டுகளில் நான் சவாலாகவே சொல்கிறேன், ஏதாவது ஒரு திருக்கோயிலில் 79 கல் தூண்கள் புதிதாக வரவழைக்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டு ஒரு மண்டபத்தைக் கட்டிய வரலாறை எங்காவது காண்பியுங்கள் பார்க்கலாம்.

அறநிலையத்துறையில் கழக அரசின் பணிகள்!

கிட்டத்தட்ட கடந்த ஐந்து ஆண்டுகளில் நாங்கள் தினந்தோறும் மேற்கொண்ட ஆய்வு, அந்த அறங்காவலர் குழு, அதற்குண்டான ஒத்துழைப்பு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய வழிகாட்டுதலோடு நாமக்கல்லில் இருந்து கல்லெடுத்து, 79 தூண்களை வடிவமைத்து 'வீர வசந்த ராயர் மண்டபத்தை' உருவாக்கிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி.

எங்களைப் பார்த்து அவர் கேட்கிறார், அவருக்கு எதற்குமே வித்தியாசம் தெரியவே இல்லை. அறிவைப் பற்றிச் சொல்லுகிறார்; அவர் பெரிய மகானாகவே இருக்கட்டும், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

நாங்கள் கோயிலின் கோபுரத்திலே ஊற்றப்படுகின்ற புனித நீருக்கும், அண்டாவிலே வைத்து ஊற்றப்படுகின்ற தண்ணீருக்கும் வித்தியாசம் தெரிந்தவர்கள்.

இதுவரை ஒரே ஒரு திட்டத்திற்குக்கூட இந்து சமய அறநிலையத்துறையில் அடிக்கல் நாட்ட முடியாத ஒரு அரசாக இந்த அரசு இருக்கின்றது.

செய்தியாளர்: *குறிப்பாக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரான உங்களை மட்டும் டார்கெட் செய்வது போல "அறிவு இருக்கிறதா?" என்று கேட்கிறார். அவருக்குத் தெரியுமா, ஏன் மக்களோடு மக்களாகப் போகமாட்டார் என்பது போன்ற விமர்சனங்களைத் தொடர்ந்து வைத்துக் கொண்டே வருகிறாரே, அதற்கு என்ன காரணமாக இருக்கும் என நினைக்கிறீர்கள்?*

பி.கே.சேகர்பாபு: நாங்கள் மக்களோடு பயணிப்பவர்கள். கிட்டத்தட்ட என்னுடைய பொதுவாழ்க்கையை எடுத்துக்கொண்டாலே, 48 ஆண்டுகள் பொதுவாழ்க்கையில் இருப்பவன். என்னுடைய பொதுவாழ்க்கையின் வயது கூட அவருக்கு இல்லை. நாங்கள் ஐயப்ப சரணத்தில் சொல்வது போல் "கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை" என்ற வரிகளோடு பல வற்றைக் கடந்து வந்திருப்பவர்கள்.

அவர் தற்போதுதான் அரசியலுக்குப் பயணித்திருக்கின்றார். அவர் அறிவுக் களஞ்சியமாகவே இருக்கட்டும், தேவைப்படுபவருக்கு அவர் அறிவைத் தந்தால் வாங்கிக் கொள்கிறோம். அவர் ஏதாவது எங்களுக்கு உபதேசம் தந்தால் கூட அந்த உபதேசத்தை ஏற்றுக்கொள்கிறோம்.

நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய இந்தப் பேச்சை, அவருடைய தொனியை, அவருடைய செயல்பாடுகளை மக்கள் சிறப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள், அறிந்து கொண்டிருக்கின்றார்கள்.

கோயிலுக்குள்ளேயே 'ரீல்ஸ்'போடும் அமைச்சர்!

கோயிலுக்குள்ளேயே 'ரீல்ஸ்' போடுகின்ற ஒரே பழக்கத்தை வைத்திருப்பவர்; ராஜகோபுரத்தைக் கூட காலணியுடன் ஏறிச் செல்பவர்; முறுக்குக்குக் கூட நாள் கேட்பவர்; முறுக்கு உற்பத்தி ஆகின்ற நேரத்தைக் கேட்கக்கூடிய ஒரு அமைச்சரைப் பெற்றிருப்பது இந்து சமய அறநிலையத்துறையின் துரதிர்ஷ்டம்!

ஆதவ் அர்ஜூனாவின் மடமைத் தனம்!

செய்தியாளர்: *இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றால் அரசியலை விட்டுப் போய்விடுவதாக ஆதவ் அர்ஜுனா உதயநிதிக்கு நேரடியாகச் சவால் விட்டிருக்கிறாரே?*

பி.கே.சேகர்பாபு: நாம் ஒன்றும் போர்க்களத்திலே, யுத்தகளத்திலே நின்று கொண்டிருக்கவில்லை. தமிழ்நாடு அரசியல் களத்திலே 78 ஆண்டுகள் பயணித்திருக்கின்ற ஒரு இயக்கத்தை மிரட்டுகின்ற பாணியிலே ஆதவ் அர்ஜுனா போன்றவர்கள் ஈடுபடுவது அவர்களுடைய மடமையைக் காட்டுகிறது. இதையெல்லாம் கடந்து வந்த இயக்கம் இது.

ஆணவம் பிடித்தவர்களுக்கு தக்க தீர்ப்பு கிடைக்கும்!

எப்பொழுதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சோதனை என்று வருகின்றதோ, எப்பொழுதெல்லாம் இந்த இயக்கம் இப்படிச் சிறுமைப்படுத்தப்படுகின்றதோ, அப்போதெல்லாம் சினம்கொண்டு சீறுகின்ற சிங்கமாக இந்த இயக்கமும், இந்த இயக்கத்தின் தொண்டனும், தோழனும் மாறுவான்!

நீதி என்று ஒன்று இருக்கின்றது. இயற்கை என்று ஒன்று இருக்கின்றது. இறை என்று ஒன்று இருக்கின்றது. இதற்கெல்லாம் அப்பாற்பட்டு ஆணவம் கொண்டு அலைபவர்களுக்கு நீச்சயமாக இயற்கையும் இறைவனும் தீர்ப்பை வழங்குவார்கள்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேட்டியளித்தார்.




மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா. இராஜேந்திரன், திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சத்யா ஆகியோர் சேலம் மத்திய மாவட்ட கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் மங்களம் ஊராட்சிக்குட்பட்ட நெல்வாய் கூட்ரோடு பகுதியில் பொதுமக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர். உடன் மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், சேலம் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

த.வெ.க. மாவட்டச் செயலாளர் அலுவலகம் எதிரிலேயே

பெண்ணிடம் 9 சவரன் சங்கிலி பறிப்பு! பெண்கள் பாதுகாப்பு எங்கே?

திருவள்ளூரில் அதிர்ச்சி சம்பவம்; ஆளுங்கட்சிக்கு பொதுமக்கள் கேள்வி!



திருவள்ளூர்,அக் 2;-

திருவள்ளூர் நகரம் 21-வது வார்டில், த.வெ.க. மாவட்டக் கழகச் செயலாளரும் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினருமான அலுவலகத்திற்கு எதிரே நடந்து சென்ற பெண்ணிடம் இருந்து 9 சவரன் தங்கச் சங்கிலியை இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் பறித்துச் சென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணை பின்தொடர்ந்து வந்ததாக கூறப்படும் இரு நபர்கள், திடீரென அருகில் வந்து அவரது கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை பறித்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது. அதிர்ச்சியடைந்த பெண் கூச்சலிட்டதைத் தொடர்ந்து அப்பகுதி பொதுமக்கள் திரண்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர். அப்பகுதியில் பதிவாகியுள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்து, சங்கிலி பறிப்பில் ஈடுபட்டதாக கூறப்படும் இருவரையும் அடையாளம் காணும் பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

"பெண்களின் பாதுகாப்பே முக்கியம்" என்று ஆட்சியாளர்கள் தொடர்ந்து பேசிவரும் நிலையில், ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமானவரின் அலுவலகத்திற்கு எதிரிலேயே ஒரு பெண்ணின் கழுத்தில் இருந்து 9 சவரன் சங்கிலி பறிக்கப்பட்டிருப்பது எத்தகைய பாதுகாப்பு நிலை? என பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பெண்களின் பாதுகாப்பு குறித்து மேடைகளில் பேசுவது மட்டும் போதுமா? மக்கள் நடமாட்டம் உள்ள முக்கியப் பகுதிகளில் காவல்துறை கண்காணிப்பும், ரோந்து பணியும் போதுமான அளவில் உள்ளதா என்பதையும் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும். ஆளுங்கட்சியினரின் அலுவலகத்திற்கு அருகிலேயே பெண்களுக்கு பாதுகாப்பு கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் அச்சம் தெரிவிக்கும் நிலையில், அரசு இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறது? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சூலூர் எஸ்.எஸ்.பொன்முடி

அக்டோபர் 2 (2012)



மாவட்டக் கழக துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியக் கழகச் செயலாளர் என்ற பொறுப்புகளை வகித்து, சூலூர் பகுதியில் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

சூலூர் பேரூராட்சித் தலைவர், நிலவள வங்கித் தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்,பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக மக்கள் பணியாற்றியவர்.

1986ஆம் ஆண்டு முதல் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.